**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-1 | Date | : 25.04.2024 |
| Case No. | : **O.S.118/2020** | Nationality | : Indian |
| Name | : சாந்தி | Religion | : |
| Father's/Husband's Name | : மேகராஜன் | Age | : 60 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வழக்கு சொத்து எனது அம்மாவிற்கு எவ்வாறு கிடைத்தது என்றால் எனது அம்மா வழக்கு சொத்திலேயே குடியிருந்து வந்ததால் அந்த சொத்து கிடைத்தது. தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது தாத்தா வெங்கட்ராமன் மற்றும் பாட்டி காசியம்மாளுக்கும் சொந்தமானது. எனது தாத்தாவிற்கு 7 நபர்கள் வாரிசாவார்கள். அதில் எத்தனை நபர்கள் இறந்துவிட்டார்கள் என்று தெரியாது. அந்த வாரிசுகளில் எனது அப்பாவும் ஒரு நபர் ஆவார். தாவா சொத்து எனது தாத்தாவிற்கு சொந்தமானது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாத்தாவிற்கு எந்த ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்து கிடைத்தது என்றால் எனது தாத்தா பெயரில் ஆவணங்கள் எதுவும் இல்லை.

2. தாவா சொத்தின் நீள அகலம் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் நீளம் அகலம் தெரியாது. 12 செண்ட் விஸ்தீரணம் ஆகும். நான் எதன் அடிப்படையில் தாவா சொத்தின் விஸ்தீரணம் 12 செண்ட் என்று சொல்கிறேன் என்றால் 1933 ம் வருடம் எனது பாட்டி

பெயரில் ஏற்பட்டுள்ள பத்திரத்தை ஆவண எழுத்தர் அலுவலகத்தில் வைத்து படித்தது வைத்து சொல்கிறேன். அந்த ஆவண எழுத்தர் பெயர் தெரியுமா என்றால் ராஜா ஆகும். அவர் பந்தநல்லூரை சேர்ந்தவர் ஆவார். அவரை எனது தரப்பில் சாட்சியாக விசாரிக்க முடியுமா என்றால் அவர் சாட்சியாக வர சம்மதித்தால் அழைத்து வருகிறேன்.

3. அந்த ஆவணத்தில் எத்தனை செண்ட் விஸ்தீரணமுள்ளது என்று ராஜா சொல்லிதான் தெரியுமா என்றால் ராஜா ஆவணத்தை படித்து காண்பித்ததின் அடிப்படையில் தெரியும். நான் நேரடியாக ஆவணத்தை படித்து பார்க்கவில்லை. லெட்சுமி அம்மாளை எனக்கு தெரியுமா என்றால் அவர் எனது அத்தை ஆவார். அவர் தஞ்சாவூரில் குடியிருந்து வருகிறார். லெட்சுமி அம்மாளுக்கு எத்தனை வயதிருக்கும் என்றால் சுமார் 90 வயதிருக்கும். மேற்படி லெட்சுமி அம்மாள் எனது தாயாரை பார்க்க வருவாரா என்றால் 10 வருடங்களுக்கு முன்பு வந்து கொண்டிருந்தார். லெட்சுமி அம்மாளின் கணவர் பெயர் என்னவென்றால் நாராயணசாமி ஆகும்.

4. நான் எத்தனை சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் குடியிருந்து வரும் ஒரு சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி கோமதிக்கு எதிராக எங்கள் குடும்பத்தாரால் எத்தனை வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனது மாமா பையன் கணேசன் மற்றும் 10 நபர்கள் கோமதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். எனது தாயார் குடியிருந்து வரும் வீட்டின் பட்டா எண் தெரியுமா என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. வாசாஆ 2 முதல் வாசாஆ 5 வரையிலான கிஸ்தி ரசீதுகளில் சொத்தின் சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியவில்லை. வாசாஆ 8 , வாசாஆ 9 மற்றும் வாசாஆ 10 வரி ரசீதுகளில் அவை எந்த சொத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை. வீட்டின் கதவு எண் 17 குறிப்பிடப்பட்டுள்ளது.

5. வாசாஆ 11 முதல் வாசாஆ 17 வரையிலான வீட்டு வரி ரசீதுகளில் சொத்தின் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றாலும் வீட்டின் கதவு எண் 17 என குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எந்த ஆவணமும் தாவா சொத்திற்குரியது இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் வழக்கு தாக்கல் செய்த போது தெரியும். வழக்கு தாக்கல் செய்த காலத்தில் நான் எந்த வழக்கு ஆவணங்களிலும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு வழங்கப்பட்ட பொது அதிகார ஆவணம் எங்கு தயார் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் எனது வழக்கறிஞரைதான் கேட்க வேண்டும். தாவா சொத்து எனது தாயாருக்கு எவ்வாறு கிடைத்தது என்பதற்கான ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6. காசியம்மாளின் நேரடி வாரிசுகள் எனது அப்பா மற்றும் 6 நபர்கள் என்றால் சரிதான். எனது அப்பாவின் பாகமான 1/7 பாகத்தில் எங்கள் 4 பேருக்கும் பாகம் என்றால் சரியல்ல. நாங்கள் அதை மறைத்து சரஸ்வதியம்மாள் விலைக்கு வாங்கிய முழு சொத்தும் காசியம்மளுக்கு கிடைத்ததாக பொய்யாக சொல்லி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. உண்மையில் காசியம்மாள் எந்த சொத்தினை என்ன அளவிற்கு விலைக்கு வாங்கினார் என்பது தற்போது வரை எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. உண்மையில் பிசாஆ 1 ஆவணத்தின்படி சரஸ்வதியம்மாள் விலைக்கு வாங்கியது 17 செண்ட் விஸ்தீரணமுள்ள சொத்து என்றாலும் அதில் பேர்பாதி வாசாஆ 1 ன்படி காசியம்மாள் கிரயம் பெற்றுள்ளார் என்றாலும் அதுபற்றி முழு விவரம் தெரியாது. எனது தாயார் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் தாவா சொத்தினை வெங்கட்ராம பத்தர், குப்புசாமி பத்தர் ஆகியோர் ஏலம் எடுத்து அவர்களுக்கு சொந்தமானதாக பொய்யாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

7. மேற்படி நபர்களுக்கு தாவா சொத்து சொந்தம் என்பதை காட்டுவதற்கு எந்த வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சரஸ்வதியம்மாள் நீதிமன்ற ஏலம் மூலமாக சொத்தினை வாங்கியுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்திற்கான பட்டாவை தாக்கல் செய்தால் அது எங்களுக்கு எதிராக அமைந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. காசியம்மளுக்கு யார் யார் வாரிசுகள் என்பது தெரியக்கூடாது என்பதற்காகதான் அவரது வாரிசு சான்றை நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தாயார் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் வாசாஆ 1 ஆவணம் தவிர மற்ற ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காசியம்மாளின் இறப்பு சான்றை நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

8. சரஸ்வதியம்மாளுக்கு சொந்தமான மொத்த சொத்தில் பாதி சொத்து மற்றும் காசியம்மாளின் வாரிசுகளில் 5 நபர்கள் பிரதிவாதியின் மகனுக்கு எழுதிக் கொடுத்துள்ள சொத்து ஆகியவற்றில் அவர்கள் அனுபவத்தை தொந்தரவு செய்வதற்காகதான இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் தாவா சொத்தில் 50 அல்லது 60 வருடங்களாக நாங்கள் மட்டும் குடியிருந்து வரவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியும் தாவா சொத்தில்தான் குடியிருநது வந்தார் என்றா்லும் அவரது மகனுக்கு கும்பகோணத்தில் வேலை கிடைத்ததால் அவர்கள் கும்பகோணம் சென்றதை பயன்படுத்தி தாவா சொத்தில் அவர்களது அனுபவத்தை தடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பிராதில் சொல்லியவாறு 11.08.2020 ம் தேதி எவ்வித பிரச்சனையும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் வழக்கிற்காக பொய்யாக அந்த தேதியை குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

9. பிரச்சனை ஏற்பட்டதாக சொல்லப்படுவது குறித்து எனது தாயார் காவல் நிலையத்தில் புகார் எதுவும் அளித்துள்ளாரா என்றால் இல்லை. பொய்யான வழக்குமூலத்தின் அடிப்படையிலும் தவறான சொத்து விவரத்தின் அடிப்படையிலும் எங்களுக்கு எந்த விதத்திலும் உரிமையில்லாத சொத்தைப் பொறுத்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படக்கூடியது என்றால் சரியல்ல. எனக்கு முறையான அதிகாரம் வழங்கப்படாமல் நான் வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.